

புதுதில்லியில் இந்திய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களை நேற்று முன்தினம் (22.01.2025) தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரில் சந்தித்து திருச்சி மாவட்டம் மணப்பாறையில் வருகின்ற ஜனவரி 28 முதல் பிப்ரவரி 3 வரை நடைபெறவுள்ள பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி குறித்த தகவல்களை தெரிவித்து, தற்போது நடைபெற்று வரும் முன்னேற்பாடு பணிகளின் நிலை குறித்து எடுத்துரைத்தார்.உடன் பாரத சாரண சாரணியர் இயக்கம் தேசிய முதன்மை ஆணையர் கே.கே.கண்டேல்வால், பாரத சாரண சாரணியர் இயக்கம் தலைவர் அனில்குமார் ஜெயின், மாநில முதன்மை ஆணையர் பாரத சாரண சாரணியர் இயக்கம் முனைவர் க. அறிவொளி மற்றும் பாரத சாரண சாரணியர் இயக்கம் மாநில செயலர் முனைவர் பூ.ஆ.நரேஷ் ஆகியோர் உள்ளனர்.

# தமிழ் மொழி பல வழிகளில் புது வடிவில் உருவெடுத்திட வேண்டும்!

## காரைக்குடியில் முதல்வர் முன்னிலையில் ப. சிதம்பரம் எம்.பி.பேச்சு!

சிவகங்கை, ஜன. 24 -

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் எம்.பி. குடும்பத்தினரால் ரூபாய் 12 கோடியில் வளர் தமிழ் நூலகம் கட்டப்பட்டுள்ளது.



அந்த நூலகத்தை தமிழ்நாடு முதல்வர் மு .க . ஸ்டாலின் அவர்கள். திறந்து வைத்தார் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப. சிதம்பரம் நூலகத்திற்கான நோக்கம் குறித்து பேசியதாவது .இந்த விழா வழக்கமான விழாவாக கொண்டாடப்படவில்லை. தமிழ் மற்றும் தமிழ் மொழி வளர்ச்சிக்காக இந்த விழா நடைபெறுவதாக கருதுகிறேன். இளம் வயதில் என்னுடைய தாயார் லட்சுமி என்னை தமிழ் ஆங்கிலம் படிக்குமாறு வற்புறுத்தி வந்தார் .

இதனால் நான் தமிழ் மொழி படித்ததால் தமிழில் அதிக ஆர்வம் கொண்டவனானேன். நான் தமிழ் மொழியை அதிகமாக பேசி நேசிப்பதற்கு காரணமாக இருந்தவர் என் தாயார். தமிழ் மொழி மீது இன்றுவரை பற்று ஏற்பட காரணம் முனைவர் ராஜேந்திரன், பதிப்பாளர் கவிதா சொக்கலிங்கம் ஆகியோருக்கு நான் இன்று நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன் .

நாம் அனைவரும் தமிழ் வாழ வேண்டும் வளர வேண்டும் என்று விரும்புகிறோம். நினைத்து வருகிறோம் அதை 9 கோடி தமிழர்களும் நினைத்திட வேண்டும். தமிழ் என்றும் ஆட்சி கோலவேண்டும். எங்கும் என்றும் ஆட்சி மொழியாக திகழ வேண்டும்.

இசை தமிழ், நாடகத்தமிழ், மட்டும் போதாது. நாடக தமிழ், சட்டம் தமிழ், மருத்துவம் தமிழ் போன்று டிஜிட்டல் தமிழ், ரோபோடிக்ஸ் போன்று தமிழ் பல்வேறு பரிமாணங்களில் புதிய வடிவமைப்பினை பெற வேண்டும். இங்கு அமைந்துள்ள இந்த நூலகம் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மையமாக அமைய வேண்டும் என்று விரும்புகிறேன் . சிறுகதை , கவிதை வரலாறு மற்றும் போன்றவற்றிற்கு இந்த நூலகம் நாற்றங்காலாக அமைய வேண்டும் .சிவகங்கை மாவட்டம் தமிழ் வளர்த்த பூமியாகும். வள்ளல் அழகப்ப செட்டியார் எங்களுக்கு கிடைத்த மிகப் பெரிய வரமாகும் .

எங்களுக்கு அறிவுப்பசி அதிகம். யானைப்பசி போன்றது. அதற்கு இங்கு உள்ளவர் கள் உதவவேண்டும். தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இந்த நூலகத்திற்கு உதவிடவேண்டும். எங்களது குடும்பத்தினருக்கு இங்கு வளர் தமிழ் நூலகம் ஏற்படுத்த தந்ததற்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ப.சிதம்பரம் எம்.பி. பேசினார்.

### இதுவரை 1, 46, 377 நபர்கள் பார்வையிட்டனர்!

# சென்னை தீவுத்திடலில் சுற்றுலாப் பொருட்காட்சி!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு!

சென்னை, ஜன. 24 -

சென்னை தீவுத்திடலில் நடைபெற்று வரும் 49 வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வரும் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்கள் அனைவரும் எளிதில் அறிந்து பயன்பெறும் வகையில் பல்வேறு “திட்டங்களின் செயல் மாதிரிகளுடன் அரசு துறைகளின் அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் சுற்றுலாத்துறை, பொதுப்பணித்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பள்ளிக் கல்வித்துறை, உயர்கல்வித் துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, கூட்டுறவுத்துறை, நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை உள்பட பல்வேறு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் 41 அரங்குகளுடன், ஒன்றிய அரசின் சென்னை துறைமுகம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் அரங்குகள் உள்பட மொத்தம் 43 அரங்குகள் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

தீவுத்திடலில் நடைபெற்று வரும் 49 -வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.

21.1.2025 வரை இப்பொருட்காட்சியினை 1,20,253 பெரியவர்கள் மற்றும் 26,124 குழந்தைகள் என மொத்தம் 1,46,377 நபர்கள் பார்வையிட்டுள்ளார்கள்.

இப்பொருட்காட்சியில் 110 சிறிய கடைகள் மற்றும் 30 தனியார் அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி உண்ணும் ஆவின் பால்கோவா, ஆவின் ஐஸ்கிரீம் உள்பட பல்வேறு திண்பண்டங்கள் இந்த பொருட்காட்சியில் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும், 80,000 சதுர அடி பரப்பளவில் பொழுது போக்கு வளாகம் அமைக்கப்பட்டு அதில் 30 க்கும் மேற்பட்ட இராட்சத சாகச விளையாட்டு சாதனங்கள், சிறுவர் விளையாட்டு சாதனங்கள் மற்றும் நவீன கேளிக்கை சாதனங்கள் மக்கள் மனதை கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. சிறுவர் இரயில், பனிக்கட்டி உலகம், அவதார் உலகம், மென் காட்சியகம், மிரளவைக்கும் பேய் வீடு, 3D தியேட்டர், அறிவியல் உலகம் போன்ற பொழுது போக்கு அம்சங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை அலுவலக நாட்களில் மாலை 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும், சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களில் காலை 11.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது.

மேலும், பொருட்காட்சி நுழைவுச்சீட்டினை வரிசையில் நின்று வாங்க முடியாதவர்களுக்கு வசதியாக டிஜிட்டல் தொழில் நுட்பம் “UPI Payment Methods” மூலம் பணம் செலுத்தி எளிதில் நுழைவுச் சீட்டினை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பொருட்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்கள் வசதிக்காக சென்னை நகரின் முக்கிய பகுதிகளிலிருந்து அரசுப் பேருந்துகள் கூடுதலாக சுற்றுலாப் பொருட்காட்சிக்கு இயக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.




சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் (22.01.2025) ஆணையர் அலுவலகத்தில், திருக்கோயில்கள் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல், பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் தொடர்பான சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் சுற்றுலா. பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், சுற்றுலாத்துறை ஆணையர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.முரசொலி, இந்து சமய அறநிலையத்துறை, சுற்றுலாத்துறை மற்றும் தொல்லியல் துறை அலுவலர்கள் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் நேற்று முன்தினம் (22.01.2025) கரிமநீக்க வழித்தடங்கள் மற்றும் கால நிலை மாற்றத்திற்கெதிரான செயல் திட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் செல்வி அபூர்வா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில் குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு காலநிலை மாற்ற ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் திருமதி நிர்மலா ராஜா மற்றும் வசுதா அறக்கட்டளை தலைமைச் செயல் அலுவலர் ஸ்ரீனிவாஸ் கிருஷ்ணசுவாமி, அரசுத் துறைச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருக்கோயில்கள் அமைந்துள்ள

# சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல் தொடர்பாக சீராய்வுக் கூட்டம்!

## அமைச்சர்கள் இரா.இராஜேந்திரன், அர.சக்கரபாணி, பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜன. 24 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் (22.01.2025) ஆணையர் அலு வலகத்தில், திருக்கோயில்கள் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல், பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் தொடர்பான சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருக்கோயில்கள் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களை மேம்படுத்திடவும், அங்கு வருகைதரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தந்து மன அமைதி, பிரார்த்தனை மற்றும் ரம்மியமான சூழலை உருவாக்கி தந்திடும் வகையில் முதற்கட்டமாக திருவொற்றியூர், மயிலாப்பூர், திருவான்மியூர், காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம், கங்கை கொண்ட சோழபுரம், இராமேஸ்வரம், வெள்ளியங்கிரி, தஞ்சாவூர், திருவானைக்காவல், திருநெல்வேலி, பாபநாசம், பர்வத மலை, சுசீந்திரம், சங்கரன் கோவில், திருவாரூர், சதுரகிரி, வேலூர் ஆகிய 23 திருக்கோயில்களை சார்ந்த சுற்றுலாத் தலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், திருக்கோயில்களில் கட்டணச் சீட்டு விற்பனை மையம், பொருட்கள் பாதுகாப்பறை, காலணிகள் பாதுகாக்குமிடம், காத்திருப்பு கூடம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பிட வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைத்தல், மலை திருக்கோயில்களில் மூத்த குடிமக்கள் நிறைவான தரிசனம் மேற்கொள்ளும் வகையில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்துதல், அனைத்து திருக்கோயில்களிலும் வாகனங்களை நிறுத்துமிடம் அமைத்தல், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் திருக்கோயில் பூங்கா, அகழி மற்றும் இராஜராஜன் சிலை அமைந்துள்ள பகுதிகளை செம்மையாக பராமரித்து பாதுகாத்தல், அனைத்து திருக்கோயில்களிலும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் இளைப்பாறும் வகையில் வசதிகளை ஏற்படுத்துவதோடு, செயற்கை நீரூற்றுடன் கூடிய சிறிய பூங்காக்கள் அமைத்தல் போன்ற பணிகள் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், சுற்றுலாத்துறை ஆணையர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி. என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.முரசொலி, கூடுதல் ஆணையர்கள் திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, இந்து சமய அறநிலையத்துறை, சுற்றுலாத்துறை மற்றும் தொல்லியல் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தென்னிந்திய தொல் பொருள் வரலாற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி

# கீழடி அகழாய்வு அறிக்கையை வெளியிட வேண்டும்!

## நடவடிக்கை எடுக்கக் கோரி - ஒன்றிய அமைச்சருக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, ஜன. 24 -

வடசென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி விராசாமி, தென்னிந்திய தொல்பொருள் வரலாற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி, கீழடி அகழாய்வு அறிக்கையை வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொல்லியல் மற்றும் பண்பாட்டு துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

தமிழ் நிலத்தின் தொல்பொருள் மரபுகள் மற்றும் பண்பாட்டுச் செல்வங்களை வெளிக்கொணர்வதற்கான முக்கியமான முயற்சியாக கீழடி அகழாய்வு விளங்குகிறது. 982 பக்கங்களுக்கு மேற்பட்ட விரிவான அறிக்கையை முனைவர் கே. அமர்நாத் ராமகிருஷ்ணன் தலைமையில் தயாரிக்கப்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசிடம் தொல்லியல் ஆய்வு துறை (ASI) மூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில் கீழடி அகழாய்வின் வளர்ச்சி, கண்டுபிடிப்புகள், விஞ்ஞானப் பார்வைகள் மற்றும் கி.மு. 800 முதல் கி.பி. 300 வரை தென்னிந்தியாவின் பண்பாட்டு வரலாற்று வளர்ச்சியை விரிவாக விவரிக்கிறது. இதன் மூலம் தமிழ்நாட்டின் தொல்பொருள் தளங்களின் மரபு மற்றும் பண்பாட்டு செல்வம் பொதுமக்கள் முன்னே வரும்.

கீழடி அகழாய்வு தமிழ்நாட்டின் வரலாற்று பெருமைகளை முக்கிய அடையாளமாக கருதப்படுகிறது. பல்லவர், சோழர், பாண்டியர், முத்தரையர் மற்றும் நாயக்கர் உள்ளிட்ட பழம் பெரும் அரசு களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தளங்களில் இருந்து கிடைத்துள்ள தரவுகள் எதிர்கால தலைமுறைகளுக்கான வழிகாட்டியாக இருக்கும்.



2024 பிப்ரவரியில், மதுரை உயர்நீதிமன்றம் பொது நல மனுவின் அடிப்படையில் மத்திய அரசுக்கு மூன்று மாதத்திற்குள் உடனடியாக வெளியிடும்படி ஆணை வழங்கியது மற்றும் அதன் விவரங்களை பொது மக்களுக்கு கிடைக்கச் செய்யவும் கூறப்பட்டது.

இந்த அறிக்கையின் வெளியீடு கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இது தமிழர்களின் பண்பாட்டு செல்வத்தை உலகளவில் விளக்குவதில் முன்னேற்ற த்தை உருவாக்கும். மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த அறிக்கையை விரைவாக வெளியிட வேண்டும். இதன் மூலம் தமிழ்நாட்டின் தொல்பொருள் மரபுகளை பாதுகாக்க வேண்டும் என்ற விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். இத்துடன், கீழடி அகழாய்வு அறிக்கையை விரைவில் வெளியிட மத்திய அரசை மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி விராசாமி அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

இந்த கடிதத்தில் நகலை பிரதமர் அவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் பெருநகர் புதிய காலனி பகுதியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா கல்வெட்டினை அமைச்சர்கள் ஆர்.காந்தி, சி.வெ.கணேசன் ஆகியோர் திறந்து வைத்து கழகக் கொடியினை ஏற்றி வைத்தனர். அருகில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.செல்வம், ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் பாரிவள்ளல், பேரூராட்சித் தலைவர் சசிகுமார், ஒன்றிய குழு உறுப்பினர் ருத்ரகோட்டி, ஊராட்சி மன்ற தலைவர் மங்கள கௌரி வடிவேலு, கிளை கழக செயலாளர்கள் வடிவேலு, நாகராஜன், ரமேஷ், சிவா, சந்தானம், வெங்கடேசன், ஒன்றிய இளைஞரணி செயலாளர்கள் யுவராஜ், தினகரன், ராமச்சந்திரன், தமிழ்ச்செல்வன், அரவிந்தன், மகேஷ், ஜீவா, ஆதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.